**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.538/2018**

**CNR.No.TNDG03-004428-2018**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண்.162/2017
U/s. 379 IPC & 21(5) of Mins & Minerals Act.

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

முத்துப்பாண்டி (23/2017)
த/பெ. முனியாண்டி,
199, பட்டவன் தெரு, குளத்தூர்,
திண்டுக்கல். ...எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 538 of 2018 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Town North Police Station, Dindigul in Cr.No.162/2017 |
| 3. | Name of the accused | Muthupandi |
| 4. | Father’s Name | Muniyandi |
| 5. | Occupation | - |

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">199, Pattavan Street, Kulathur, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">23/2017</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">22.06.2017</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">-<br>04.10.2018</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">22.06.2017</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">29.06.2017</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">13.11.2018</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 27.11.2018 the accused was questioned on substance of accusation U/s.379 IPC & 21(5) Mines and Minerals Act. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>19.08.25</td><td>19.08.25</td></tr>
<tr><td>PW2</td><td>19.08.25</td><td>19.08.25</td></tr>
<tr><td>PW3</td><td>07.10.25</td><td>07.10.25</td></tr>
<tr><td>PW4</td><td>18.02.26</td><td>18.02.26</td></tr>
<tr><td>PW5</td><td>23.03.26</td><td>23.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">30.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 379–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு கடந்த 04.10.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.538/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ரமேஷ், B.A., B.L., என்பவர் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**<u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் எதிரி கடந்த 22.06.2017ம் தேதி அதிகாலை 5.30 மணிக்கு குளத்தூர் அருகே இருக்கும் சந்தனவர்த்தினி ஆற்றுப்படுகையில் இருந்து அரசு அனுமதியின்றி சுமார் 1 யூனிட் மணலை TN 57 L 1372 TATA 407 டிப்பர் லாரியில் திருடிக்கொண்டு ஓட்டி வந்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 379 IPC & 21(5) Mines & Minerals act-ன் படி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II.வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:</u>**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 13.11.2018ம் நாள் அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 379 IPC & 25(1) Mines and Minerals Act–ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக்கூறி வினாவியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 379 IPC & 25(1) Mines and Minerals Act–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**<u>III. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

3. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>**

4. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் "கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல்

நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது அன்றையதினம் காலை 05.30 மணிக்கு தானும் சார்பு ஆய்வாளர் செல்வி சூர்யதிலகராணி சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்பிரமணி, தலைமை காவலர் அரியவேல் ஆகியோர்களுடன் மணல் திருட்டு சம்மந்தமாக குளத்தூர் சுடுகாடு அருகில் உள்ள தார்ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த TN 57 L 1372 407 டிப்பர் லாரியை தடுத்து நிறுத்தி அதனை ஓட்டி வந்த ஓட்டுநர் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த முனியாண்டி மகன் முத்துப்பாண்டி என்பவரை சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள் என்றும், அவர் தாமாக முன்வந்து மேற்படி லாரியில் திருட்டு மணல் இருப்பதாக தெரிவித்தார் என்றும், மேற்படி மணலை சந்தன ஆற்றில் அரசு அனுமதி பெறாமல் திருடிக்கொண்டு வந்ததாக ஒப்புக் கொண்டதன் பேரில் உடன் வந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் லாரி மற்றும் ஒரு யூனிட் மணலை கைப்பற்றியதாகவும், பின்பு லாரியை ஓட்டிவந்த ஓட்டுனரை கைது செய்ய உதவியாக இருந்ததாக" சாட்சியம் அளித்துள்ளார்.

5. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 அவரது சாட்சியத்தில் "கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஒரு லாரியை நிறுத்தி சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்றும், எதிரி முத்துப்பாண்டியை கைது செய்து மணலை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் அத்தாட்சி அ.சா.ஆ.1 என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

6. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அவரது சாட்சியத்தில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் அ.சா.4 தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை மற்றும் எதிரி கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியது மற்றும் லாரியில் இருந்த மணலை திண்டுக்கல் பாசனப்பிரிவு உதவிப் பொறியாளர் பொதுப்பணித்துறை அவர்களிடம் ஒப்படைத்தது சான்று பெற்றது பற்றியும், பின்பு வழக்குச் சொத்தான லாரியை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR No. 154/2017 ஆக பதிவு செய்ததாகவும், பணி மாறுதல் காரணமாக வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், படிவம் 91 அ.சா.ஆ.4 என்றும், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அறிவிப்பு அ.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 அவரது சாட்சியத்தில் கடந்த 28.08.2017ம் தேதி தான் தாடிக்கொம்பு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது சார்பு ஆய்வாளரிடம் கொடுத்த புகாரின் பெயரில் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண். 162/2017 சட்டப்பிரிவுகள் 379 IPC r/w 4, 21(5), 36(A) Mines and Minerals Regulation act ன் படி வழக்கை கோப்பிற்கு மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்டதாகவும், அன்றைய

தினமே சாட்சிகளை விசாரணை செய்ய ஏற்கனவே சார்பு ஆய்வாளரிடம் சொன்ன சங்கதிகளையே சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றும், அன்றையதினமே இவ்வழக்கின் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் ஆவணங்களைப் பார்வையிட்டு 28.08.2017ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

## V. எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்

9. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 30.03.2026ம் தேதி தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார்.

## VI. எதிரி தரப்பு சாட்சிகள்

10. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார். அதனால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VII. வாதுரைகள்

### 1. அரசு தரப்பில்

11. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரியிடமிருந்து வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டதாகவும், அரசு தரப்பு எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் எதிரி அரசு அனுமதியின்றி மணலை திருடி வந்தார் என்று சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

### 2. எதிரி தரப்பில்

12. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் புகார் மனு இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரி மணலை திருடவில்லை என்றும், பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றும், எதிரியை அடையாளம் காட்டி எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

## VIII.ஆய்விற்குரிய பிரச்சனை

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

## IX. தீர்வு

இவ்வழக்கில் 21(5) Mines and Minerals (Development and regulation) Act 1957–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி பிரிவில் குற்ற வனைவும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி குற்றச்சாட்டு சிறப்பு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கக்கூடிய குற்றம் என்பதால் இந்நீதிமன்றத்தில் மேற்படி குற்றச்சாட்டிற்கு தீர்வு காண இயலாது. எனவே, இவ்வழக்கின் குற்றச்சாட்டான இதச பிரிவு 379 ஐ நிரூபிக்க வேண்டுமென்றால் கீழ்கண்ட அகக்கூறுகளை நிரூபித்தல் வேண்டும்.

- ஒருவர் பிறர் வசம் வைத்திருக்கும் அசையும் பொருளை அவருடைய சம்மதமின்றி, தன் வசம் ஆக்கி கொள்ள முயற்சி செயலை செய்தால் அது இதச பிரிவு 379 ஆகும்.

இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம்,அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## குற்ற நிகழ்வு

18. மேற்சொன்ன குற்ற நிகழ்வு நடந்துள்ளதா என்று பார்க்கும்போது அரசு தரப்பால் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போது, மணல் திருட்டு சம்மந்தமாக குளத்துார் சுடுகாடு அருகில் உள்ள தார்ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது, அவ்வழியாக வந்த TN 57 L 1372 407 டிப்பர் லாரியை தடுத்து நிறுத்தி விசாரித்தபோது, அதனை ஓட்டி வந்த ஓட்டுநர் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த முனியாண்டி மகன் முத்துப்பாண்டி என்பவரை விசாரித்தபோது 1யூனிட் மணல் அள்ளியதை ஒப்புக் கொண்டுள்ளதால், அவரை கைது செய்து, விசாரித்து இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

19. மேலும், அ.சா.ஆ.1 ஆன அத்தாட்சியை பரிசீலனை செய்யும்போது, எதிரி திருட்டுத் தனமாக சந்தானவர்த்தினி ஆற்று மணலை திருடி வந்ததை எதிரியிடமிருந்து கைப்பற்றியிருக்கின்றார்கள் என்று தெரியவருகிறது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் "கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது அன்றையதினம் காலை 05.30 மணிக்கு தானும் சார்பு ஆய்வாளர் செல்வி சூர்யதிலகராணி சிறப்பு சார்பு

ஆய்வாளர் சுப்பிரமணி, தலைமை காவலர் அரியவேல் ஆகியோர்களுடன் மணல் திருட்டு சம்மந்தமாக குளத்துார் சுடுகாடு அருகில் உள்ள தார்ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த TN 57 L 1372 407 டிப்பர் லாரியை தடுத்து நிறுத்தி அதனை ஓட்டி வந்த ஓட்டுநர் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த முனியாண்டி மகன் முத்துப்பாண்டி என்பவரை சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள் என்றும், அவர் தாமாக முன்வந்து மேற்படி லாரியில் திருட்டு மணல் இருப்பதாக தெரிவித்தார் என்றும், மேற்படி மணலை சந்தன ஆற்றில் அரசு அனுமதி பெறாமல் திருடிக்கொண்டு வந்ததாக ஒப்புக் கொண்டதன் பேரில் உடன் வந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் லாரி மற்றும் ஒரு யூனிட் மணலை கைப்பற்றியதாகவும், பின்பு லாரியை ஓட்டிவந்த ஓட்டுனரை கைது செய்ய உதவியாக இருந்ததாக" சாட்சியம் அளித்துள்ளார்.

20. மேலும், குற்ற சம்பவ இடத்தை நிரூபிப்பதற்காக அத்தாட்சி சாட்சியாக அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில் "கடந்த 22.06.2017ம் தேதி காலை 05.30 மணிக்கு நானும் சார்பு ஆய்வாளர் சூரியதிலகராணி, சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ், சுப்பிரமணி ஆகியோருடன் குளத்துார் சந்தனவர்த்தினி ஆறு அருகே மணல் திருடுவதாக தகவல் கிடைத்ததாகவும், அந்த வழியாக ஒரு லாரி வந்ததாகவும், அதனை நிறுத்தி சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்றும், அந்த லாரியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்தது தெரியவந்ததால் அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் தன்னிடடும் சிறப்பு சார்பு

ஆய்வாளர் சுப்பிரமணியிடமும் கையொப்பம் பெற்றார் என்றும், அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்றும் அத்தாட்சி அ.சா.ஆ.1 என்றும்" அளித்துள்ளார். மேற்சொன்ன சாட்சியங்கள் அடிப்படையில் குற்ற சம்பவம் அரசு தரப்பால் குறிப்பிடும் இடத்தில் நடந்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்கள் அரசுக்குச் சொந்தமான மணல் என்றும், அரசிடம் எவ்விதமான அனுமதியும் இன்றி லாரியில் மணல் ஏற்றிக் கொண்டுவந்ததாகவும், மேற்படி வழக்குச் சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR No.154/2017ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. இருப்பினும், எதிரி தான் மேற்படி குற்ற நிகழ்வில் ஈடுபட்டார் என்பதை நிரூபிப்பதற்கு அவரை கைது செய்து, பின் அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதைப் பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

**<u>X. கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்</u>**

23. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிதான் செய்தாரா என்று அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்யவேண்டும். இவ்வழக்கில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "பொதுவாக நாங்கள்

ரோந்து பணிக்கு செல்லும்போது உயர் அதிகாரியின் அனுமதி பெற்றுதான் செல்வோம் என்றால் சரிதான் என்றும், சம்பவத்தைப் பற்றி யார் எனக்கு தகவல் சொன்னார் என்று தெரியாது என்றால் சரிதான் என்றும், சம்பவ இடம் எந்த திசையில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக VAO அல்லது கனிமவள அதிகாரியிடமோ தகவல் சொன்னோமா என்றால் சொல்லவில்லை என்றும், சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய இடம் என்றால் சரிதான் என்றும், பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் யாரும் முன்வராததால் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றும் அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

24. மேலும், இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சி தனது குறுக்கு விசாரணையில் "சம்பவத்தைப் பற்றி தகவல் யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான் என்றும், குளத்தூர் ஆற்றில் எந்த பகுதியில் மணல் அள்ளினார்கள் என்றால் சுடுகாடு பகுதி திசை தெரியாது என்றும், எதிரி என் முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

25. ஆகவே, இவ்வழக்கில் எதிரியை சம்பவ இடத்திலேயே கைது செய்யவில்லை என்று தெரியவருவதால் மேற்படி சம்பவத்திற்காகத்தான் எதிரியை கைது செய்தார்களா என்று சந்தேகம் எழுந்துள்ளது. மேலும்,

எதிரியிடமிருந்து சம்பவ இடத்தில்தான் மணலை கைப்பற்றியதற்கு கைப்பற்றுதல் மகஜரோ, அல்லது ஒப்புதல் வாக்குமூலமோ தயார் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளையோ, பொது மக்களையோ இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. மேலும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் போன்றவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆகவே, எதிரிதான் மேற்படி லாரியில் மணலை திருடிக் கொண்டுவந்தார் என்று எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்காத நிலையில் மேற்படி எதிரிதான் மேற்படிகுற்றச் செயலில் ஈடுபட்டார் என்று இந்நீதிமன்றம் நம்ப இயலாது.

## XI. புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

26. இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடம் "குளத்தூர் சுடுகாடு அருகில் உள்ள தார்ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது, அவ்வழியாக வந்த TN 57 L 1372 407 டிப்பர் லாரியை தடுத்து நிறுத்தி அதனை விசாரித்தபோது" என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபோது, சம்பவ இடம் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இருந்தபோதிலும், அங்கு இருந்த பொது மக்களையோ, அங்கு இருந்த நபர்களையோ இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவும் இல்லை. விசாரிக்கவும் இல்லை. அதற்கு புலன் விசாரணை அதிகாரி எந்தவிதமான விளக்கமும் அளிக்கவில்லை. மேலும், அவரது குறுக்கு விசாரணையில் "இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அனைவரும்

காவல்துறையைச் சேர்ந்த நபர்கள் என்றால் சரிதான் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரையும் கண்ணுற்ற சாட்சியாகவோ அல்லது அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் காவல்துறையைச் சேர்ந்த சாட்சிகளாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் அக்கறை சாட்சிகளாகவே கருதப்படுகிறன்றனர். மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " 1 யூனிட் மணல் அள்ளினார்கள் என்று எவ்வாறு அளவு செய்யப்பட்டது என்றால் கைப்பற்றிய மணலை பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கும்போது அவர்கள் 1யூனிட் பெற்றுக் கொண்டோம் என்று சான்றழித்துள்ளார்கள், மேற்படி பொதுப்பணித்துறையை சார்ந்தோர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், கைப்பற்றப்பட்ட மணல் ஆற்று மணலா என்பதற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், கைப்பற்றிய மணலை பொதுப்பணித்துறையினரிடம் ஒப்படைக்கும்போது அவர்கள் 1யூனிட் பெற்றுக் கொண்டோம் என்று சான்றழித்ததை இவ்வழக்கில் சான்றிதழ் எதும் இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை.

27. ஆகவே, மேற்படி பல்வேறு முரண்பாடுகள் உள்ளதால் எதிரி தான் மேற்படி லாரியில் மணல் அள்ளிக்கொண்டு வந்தார் என்றும், அது சந்தானவர்த்தினி ஆற்றுப்படுகை மணல் என்றும், எதிரியிடமிருந்துதான் மேற்படி மணல் கைப்பற்றப்பட்டது என்று அரசு தரப்பால் எதிரியின் மீது இதச பிரிவு 379-ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 379–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

29. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்தான RPR No.154/2017, ல் உள்ள TN 57 L 1372 TATA 407 Tipper லாரி–ஐ இந்நீதிமன்ற Crl.M.P. No. 5757/2017 நாள்.18.08.2017 உத்தரவின் படி மனுதாரர் /வாகனத்தின் உரிமையாளர் ஏற்கனவே இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மனுதாரர்/ வழக்குச் சொத்தின் உரிமையாளருக்கு பாத்தியப்பட உத்தரவிடப்படுகிறது.

30. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு

என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.19 01:35:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | செல்வராஜ் த/பெ. பழனிவேலு | 19.08.2025 | – |
| 2. | அ.சா.2 | அரியவேல் த/பெ. வேலாயுதம் | 19.08.2025 | அ.சா.ஆ.1 |
| 3. | அ.சா.3 | சுப்பிரமணி த/பெ. ராமர்பிள்ளை | 07.10.2025 | அ.சா.ஆ.2 |
| 4. | அ.சா.4 | சூரியதிலகராணி த/பெ. பிச்சை | 18.02.2026 | அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.2 | 22.06.17 | அத்தாட்சி |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.3 | 22.06.17 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 22.06.17 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.4 | 22.06.17 | படிவம்-91 |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.4 | 21.07.17 | பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அறிவிப்பு |

**III. அரசு <u>தரப்பு சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.19 01:36:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:–**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.